## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்புகள் –2013–14 கல்வியாண்டு – முழு நேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ /மாணவியர்களுக்கு ஆண்டுக்கு ரூ.50,000/– ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல்– ஆணை வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் :71 நாள் :7.10.2013

விஜய புரட்டாசி 21, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடிதம் எண். அ1/13659/2013
நாள் 29.5.2013.

******

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 9.5.2013 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின்வரும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "தற்போது முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ள கல்லூரியில் தங்கி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு தலா ரூ.18,000 ரூபாயும், விடுதியில் தங்கி பயிலாத மாணாக்கர்களுக்கு ரூ.10,000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. சமூக பொருளாதார நிலையில் பின் தங்கியுள்ள ஆதிதிராவிட மாணவ– மாணவியருக்கு இந்தத் தொகை போதாது என்பதைக் கருத்தில் கொண்டு, முழு நேர முனைவர் பட்டப் படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ஆண்டுக்கு ரூ.50,000/– ரூபாய் வீதம் 4 ஆண்டுகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஆண்டொன்றுக்கு 3 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர், மத்திய, மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களுக்கு தற்போது பராமரிப்பு படி மட்டும் வழங்கப்பட்டு வருகிறது என்றும், மேற்காணும் பிரிவினைச் சேர்ந்த முழுநேர முனைவர் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஏற்கனவே பெற்று வரும் மத்திய / மாநில அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகையுடன் 1)களப்பணி (Field Work) 2) கணிணி மற்றும் இணையதள வசதிகள் 3) ஆய்வு மற்றும் பாடநூல்கள் உள்ளிட்ட இதர இன்றியமையாத செலவினங்களை ஈடுசெய்யவும், தரமிகு ஆராய்ச்சி படிப்புகளை மேற்கொள்ளவும் தனி மான்யமாக (Adhoc Grant) ஒரு மாணவருக்கு வருடத்திற்கு ரூ.50000/– வீதம் அளிக்க அரசாணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, 2013-14ம் கல்வியாண்டு முதல் முழுநேர முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் முதலாம், இரண்டாம் மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டினை சேர்ந்த மொத்தம் 700 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ/மாணவிகளுக்கு நபர் ஒன்றுக்கு தலா ரூ.50,000/-வீதம் ஊக்கத்தொகை வழங்கவும், 2013-2014ஆம் ஆண்டில் இச்செலவினத்திற்கு ரூ.3,50,00,000/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்திற்கான விதிமுறைகள் தனியே பின்னர் வெளியிடப்படும்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கோரிக்கை எண்.04-02ன் கீழ் புதிதாக துவக்கப்பட்டுள்ள பின்வரும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01-ஆதிதிராவிடர் நலன் -277-கல்வி பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II –மாநிலத் திட்டம் –KW-முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர்/பழங்குடியின மாணவர்களுக்கு நிதியுதவி -12-படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும்-02-மெட்ரிக் படிப்புக்கு மேல் படிப்பு (குதொகு.2225 01 277 KW-1228)

5. ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பிற்கு மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

6. சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்/ கருவூல கணக்கு அலுவலர் மேற்கண்ட புதிய கணக்கு தலைப்பினை தங்கள் கணக்குகளில் துவக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுப் பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணை நிதி (வசெ-I) துறையில் தனியாக வெளியிடப்படும்.எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து (வசெ-I) விண்ணப்பிக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013-14ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 50812/ஆதி(ம)பந/2013 நாள் 3.10.2013 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1417 (ஆயிரத்து நானூற்று பதினேழு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை–101.
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை–6.
தொழிற்கல்வி இயக்குநர், சென்னை–25.
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
சட்டக்கல்வி இயக்குநர், சென்னை–101.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை.
பதிவாளர், டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகம், சென்னை–32
பதிவாளர், அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்.
பதிவாளர், இதர அனைத்து பல்கலைக் கழகங்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
நகல்:–
நிதித் (ஆதி(ம)ப.ந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை/ சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/10/13
பிரிவு அலுவலர்.